**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்**

**அசல் வழக்கு எண்.120 /2021**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2023- ஆம் ஆண்டு ஜுன் மாதம் 21 - ஆம் நாள் வெள்ளிகிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய PW2 - வது நபரின் வாக்குமூலம் ( 1969- ஆம் ஆண்டின் 54 வது விதியில் 9- வது பிரிவின் ஏற்பாட்டின் படி ) திரு.கோ.லோகநாதன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது. | | | | | |
| பெயர் | : | தங்கவேல் | தொழில் | : | விவசாயம் |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | பெரியசாமி | வட்டம் | : | குன்னம் |
| கிராமம் | : | அத்தியூர் | சமயம் | : | – |
| சாதி | : | – | வயது | : | 69 /2023 |

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :-**

1. தாவா சொத்திற்கு அருகில் எனக்கு நிலம் உள்ளதா என்றால் இருக்கிறது. ராஜேந்திரன், லெனின் , பெரியசாமி, ஆகியோர்களுக்கு நிலம் உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.அங்கு ராமசாமிக்கு இடம் உள்ளதா என்றால் இல்லை. ராமசாமி 2009 ல் கிரயம் பெற்று அவர் பெயரில் தாவா சொத்து தொடர்பாக பத்திரம் ஏற்பட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும் . மேற்படி வழக்கில் ராமசாமியை சேர்த்துள்ளார்களா என்றால் ராமசாமி அப்போது வெளிநாட்டில் இருந்ததால் அவருடைய மனைவியை வழக்கில் சேர்த்துள்ளார்கள்.

2. தாவா சொத்தை வாரிசு அடிப்படையில் சுப்ரமணி பெற்றதாக நான்குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான் . ஆனால் மேற்படி வாரிசு சான்றை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை . அரியபுத்திரனின் மகள் செல்லம்மாள் , தனலெட்சுமி ஆகியோர் தான் என்பதற்கு சட்டப்பூர்வமான வாரிசு சான்றை நான் பார்த்தேனா என்றால் இல்லை . தனலெட்சுமி கள்ளக்குறிச்சியில் தான் இருந்தார் . செல்லம்மாள் அத்தியூரில் இருந்தார். செல்லம்மாள் தங்கி இருந்த வீடு இப்போது யார்

DMC KUNNAM

அனுபவத்தில் உள்ளது என்றால் அது பொதுவாக உள்ளது . யாருடைய பெயரில் உள்ளது என்றால் சுப்ரமணியின் பெயரில் உள்ளது . அதில் ராஜேந்திரன் மற்றும் லெனின் வீடு கட்டி குடியிருக்கும் விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

3. தாவா சொத்தை குத்தகைக்கு பயிர் செய்யப்பட்டதாக நான் எனது நிரூபண வாக்குமூலத்தில குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் யார் பெயருக்கு குத்தகை விடப்பட்டது என்ற விபரத்தை நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான் . நான் சுப்ரமணியிடம் இருந்து கிரயம் எதுவும் வாங்கி உள்ளேனா என்றால் நம்பிக்கையின் பெயரில் கிரயம் வாங்கி உள்ளேன் . நான் சுப்ரமணியிடம் இருந்து பணம் கொடுத்துதான் கிரயம் வாங்கி உள்ளேன் . அதை நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லி உள்ளேனா என்றால் இல்லை.

4. 2009 ல் ராமசாமி கிரயம் வாங்கிய பத்திரம் தெரியும் வழக்கு நடந்துகொண்டிருக்கும்போது Exparty தீர்ப்புக்கு பிறகுதான் நான் கிரயம் வாங்கினேன். அந்த சமயத்தில் Exparty ரத்து செய்ய மனு தாக்கல் செய்திருந்தால் நான் தாவா சொத்தை கிரயம் வாங்கி இருக்க மாட்டேன் என்றால் சரிதான். Exparty உத்தரவு ரத்து செய்யப்பட்டு தற்போது வழக்கு நடைபெற்று கொண்டிருப்பதால் இது பொருத்து வரும் தீர்ப்பு குறித்து எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான் . Exparty உத்தரவை வைத்து பட்டா மாற்றம் செய்ய மனு கொடுத்திருந்தபோது அது தொடர்பாக விசாரணை நடைபெற்றதா என்றால் நடைபெற்றது. அப்போது ராஜேந்திரன் மனைவி ஆஜராகி Exparty உத்தரவை ரத்து செய்ய மனு கொடுத்திருப்பதாக சொன்ன விபரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

5. ராஜேந்திரன் வெளிநாட்டில் இருந்ததால் அவரது மனைவி பெயரில் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட விபரம் எனக்கு தெரியும் . ராமசாமி இறந்தபிறகு அவர் மகனை வழக்கின் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளாரா என்றால் இல்லை , தாவா சொத்திற்கும் சுப்ரமணியனுக்கும் வாரிசு அடிப்படையில் எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. செல்லம்மாள்

DMUNKUNNAM

எழுதி வைத்த உயில் பற்றி சுப்ரமணியன் சொல்லியுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். உயில் சம்பந்தமாக ஊரில் கேள்விப்பட்டேனா என்றால் கேள்விப்படவில்லை . தாவா சொத்து முழுக்க முழுக்க செல்லம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றாலும் அது ராஜேந்திரன் மற்றும் லெனினுக்கு உயில் மூலம் பாத்தியப்பட்டுள்ளது என்றால் உயிலை நீதிமன்றத்தில் காட்டும் பொழுது ஆட்சேபனை இல்லை.

6. தாவா சொத்து அருகில் எனது இடம் இருப்பதால் வாதியை தவறாக வழி நடத்தி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2009 ம் ஆண்டு ராமசாமி கிரயம் பெற்றார் என்ற விபரம் தெரிந்திருந்தும் பொய்யான ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்து பொறுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . சுப்ரமணியன் வெளியூரில இருப்பதால் அவருக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் 2009 ம் ஆண்டு தாவா சொத்தை நான் கிரயம் கேட்டு லெனின் , ராஜேந்திரன் இருவரும் கொடுக்க மறுத்ததால் தாவா சொத்திற்கு சம்பந்தம் இல்லாத சுப்ரமணி என்பவரை தவறான உறவு முறையை ஜோடித்து வழக்கு தாக்கல் செய்ய உடனிருந்தேன் என்றால் சரியல்ல.

7. தாவா சொத்துக்கள் குறித்து முழு உண்மைகள் எனக்கு தெரிந்திருந்தும் அதை மறைத்து இந்த வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.